பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 26 வெள்ளிக்கிழமை (13-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 323

Time Reader
11/40 PM.
12/35 PM.
Editorial Staff Date-Time

# இராணுவத் தாக்குதலை நிறுத்தி புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்குக

## கலைஞர், எழுத்தாளர், புலமையாளர் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஒக். 13

தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ராணுவ நடவடிக்கையை நிறுத்திவிட்டு தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குக.

மேற்கண்டவாறு கோரும் மகஜர் ஒன்றை குடாநாட்டைச் சேர்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், புலமையாளர்கள் 21 பேர் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த மகஜர் வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் கலைஞர்கள், எழுத்தாளர்கள் புலமையாளர்களாகிய நாம் 22-09-95 அன்று வடமராட்சி நாகர்கோவிலில் நடந்த நாற்பது பாடசாலைக் குழந்தைகளின் மரணத்தினால் திகைப்படைந்துள்ள நிலையில், அரசியல் தீர்வு பற்றிய எவ்வித குறிப்புமின்றி பல்லாயிரக்கணக்கான தமிழ்

[7 ஆம் பக்கம் பார்க்க]

## ஹபரண கப்பல் புதனன்று வருகிறது

யாழ்ப்பாணம், ஒக் 13

குடாநாட்டுக்கு அவசர தேவையான ஆயிரம் மெற்றிக்தொன் மாவுடன் "ஹபரண" கப்பல் எதிர்வரும் புதன்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரவிருப்பதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

இக் கப்பலில் மா எடுத்துச் செல்ல அரசு அனுமதி வழங்கியுள்ளமையடுத்து —

கப்பலில் மா ஏற்றும் வேலைகள் இன்று ஆரம்பமாகவிருப்பதாகவும் —

(7 ஆம் பக்கம் பார்க்க)

# நவீன ஆயுதங்கள் தராவிட்டால் ஆதரவை உடன் விலக்குவோம்!

## கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு மிரட்டல்

கொழும்பு, ஒக்ரோபர் 13

"எமது பாதுகாப்பை நாமே உறுதி செய்து கொள்ளும் வகையில் நவீன ஆயுதங்களைத் தாருங்கள். இல்லாவிட்டால் நாடாளுமன்றத்தில் அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை உடனடியாக விலக்கி விடுவோம்"

இவ்வாறு கொழும்பில் இயங்கும் தமிழ் குழுக்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு 'மிரட்டல்' விடுத்திருக்கின்றன.

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் இல்லத்தின் மீது கடந்த திங்கட்கிழமை இரவு நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்தே தமிழ்க் குழுக்கள் இத்தகைய மிரட்டலை அரசுக்கு விடுத்திருக்கின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் ஆதரவுடன் நாடாளுமன்றத்தில் ஒரேயொரு வாக்கு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்திருக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு நாடாளுமன்றத்தில் இதுவரை காலமும் கொழும்பில் இயங்கும் தமிழ்க் குழுக்களே முட்டுக்கொடுத்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஈ.பி.டி.பியின் ஒன்பது எம்.பிக்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஐந்து

(7ஆம் பக்கம் பார்க்க)

## மூவரை பொலீஸார் தேடுகின்றனர்

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் இல்லம் மீதான தாக்குதல் குறித்து சம்பவதினம் அப்பகுதியில் நடமாடியதாக சந்தேகிக்கப்படும் மூவரை பொலீஸார் தேடி வருகின்றனர்.

இவர்கள் குறித்த தகவல் தெரிந்தால் பொலீஸாருடன் தொடர்பு கொள்ளுமாறு மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## விசாரணைக்கு 200 பொலீஸார் நியமனம்

கொழும்பு, ஒக் 13

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் இல்லம் மீதான தாக்குதல் குறித்து விரிவான விசாரணைகளை மேற்கொள்ள 200 பொலீஸார் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலீஸ் மா அதிபர் கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்த பயன்படுத்தப்பட்ட "நிசான்" ரக வாகனத்தை தேடி வருவதாகவும் —

(7 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூரில் உயிரிழந்த 9 பேர் விவரம் வெளிவந்தது

யாழ்ப்பாணம், ஒக். 13

கடந்த திங்கட்கிழமை புத்தூரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஷெல் தாக்குதலில் உயிரிழந்த 9 பேர் பற்றிய விவரம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவினூடாக மெதடிஸ்த திருச்சபைக்கு கிடைத்துள்ளது.

புத்தூர் வடக்கைச் சேர்ந்த எஸ். கந்தசாமி (வயது 65), அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த பி. அரியகுமார் (வயது 76), புத்தூர் 10 ஆவது மைல் போஸ்டைச் சேர்ந்த எஸ். செல்லையா (வயது 85), அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த வி. செல்லையா (வயது 75), அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த பி. கணபதி (வயது 70), ஆவரங்கால் தோப்பு வடக்கைச் சேர்ந்த பி. சுந்தரம் (வயது 75) அச்சுவேலி தோப்பு கொலனியைச் சேர்ந்த எஸ் முருகேசு (வயது 80), பி. கந்தசாமி (வயது 75) ஆவரங்கால் வடக்கு சாலைப் பகுதியைச் சேர்ந்த பி லெச்சுமணன் (வயது 60) ஆகியோரே உயிரிழந்தவர் ஆவர்.

புத்தூர் மெதடிஸ்த திருச்சபையின் முதியோர் இல்லம் மீது வீழ்ந்த ஷெல்லினால் முதியோர் இல்லத்தைச் சேர்ந்த 9 பேர் உயிரிழந்ததாக முதலில் தகவல் வெளியாகி இருந்தன.

இது குறித்து மெதடிஸ்த சபையின் வடக்கு-கிழக்கு பகுதி மாவட்ட தலைவர் அருட் திரு. எஸ். எஸ். கருணைராஜ் செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவுடன் தொடர்பு கொண்டு தகவல் பெற்றுத் தருமாறு கேட்டிருந்தார். செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பலாலி ராணுவ முகாமுடன் [illegible]

[7 ஆம் பக்கம் பார்க்க]

## வடமராட்சியில் நேற்று ஷெல் வீச்சு: இருவர் காயம்

வடமராட்சி, ஒக். 13

வடமராட்சிப் பகுதியை நோக்கி நேற்று பிற்பகல் சுமார் 2-15 மணியளவில் பலாலி முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் இருவர் படுகாயமடைந்தனர்.

உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வீழ்ந்து வெடித்த ஷெல்களில் ஒன்று பனை மரத்துடன் மோதி வெடித்துச் சிதறியதில் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருந்த சின்னவி திருச்செல்வம் என்பவர் (38 வயது) காயமடைந்தார்.

வல்வெட்டித்துறை கம்பர்மலை வைரவர் கோவில் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் மாடு ஒன்று உடல் சிதறிப் பலியானது.

அவ்வழியால் வந்துகொண்டிருந்த திருமதி க. பவளம் (68 வயது) என்பவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த இருவரும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-173)

## நான்கு கப்பல்களில் உணவுப் பொருள்களாம்

### புனர்வாழ்வு அமைச்சு தகவல்

கொழும்பு, ஒக். 13

பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பிப்பதற்கு முன்னர் கூடிய அளவு உணவுப் பொருள்களை யாழ்ப்பாணத்தில் களஞ்சியப்படுத்த நான்கு கப்பல்களில் உணவுப் பொருள்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் உயர் வட்டாரங்களை ஆதாரம் காட்டி இலங்கை வானொலி நேற்று செய்தி வெளியிட்டது.

மாஹோ, ஹபரண, கல்யாணி, ஓஷன் கரியர் ஆகிய கப்பல்களிலேயே கொழும்புத் துறைமுகத்தில் உணவுப் பொருள்கள் ஏற்றப்படுவதாக

(7 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்துக்கு தகவல் எதுவும் இல்லை

## அரசு வெறும் பிரசாரம்?


யாழ்ப்பாணம், ஒக். 13

குடாநாட்டு மக்களுக்கு நான்கு கப்பல்களில் உணவுப் பொருட்கள் அனுப்பப்படவிருப்பதாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நேற்று விடுத்துள்ள அறிவிப்புக் குறித்து யாழ்ப்பாணத்துக்கு எந்தவித தகவலும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறைக்கு வரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கோ—

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எஸ்-எம்-பெர்ஜென்டோ

ஆதரவில்

ROTARACT CLUB

யாழ். மிட்ரவுண்
றோட்டறக்ற் கழகம்
நடத்தும்

ஆறுபேர் ஐந்து ஓவர்களைக் கொண்ட
தோற்பந்து

## கிறிக்கற் சுற்றுப் போட்டி

இச் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 1.00மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து 14 ஆம் 15 ஆம் திகதிகளில் நடைபெறும்.

அனைத்து ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

செயல் திட்ட இயக்குநர்

[சி/2464]

# காசுக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக். 13

கீழ்க்கண்டோருக்கு ஒரு தொகைப் பணம் தம்மிடம் இருப்பதாகவும் —

இன்று 13 ஆம்திகதி காலை 11 மணிக்கு யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளும்படியும் — நிதித்துறை நடுவப் பணியகப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

திருமதி. எம். தங்கவடிவேல் கோயிலாமனை, (மீசாலை வடக்கு, கொடிகாமம்)

பூரணி (பூமலர்) கணேஸ்வரன் (புத்தூர் கிழக்கு, புத்தூர்)

ரீ. இளையதம்பி (பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் புத்தூர்)

மேரி விரெலா திருச்செல்வம் (ஊர்மாலா லேன், 39/4 நியூறோட், சொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்). (இ)

## டாக்டர்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு, ஒக். 13

மருந்து விநியோக பதிப் பணிப்பாளர் டாக்டர் அஜித் மெண்டிஸை இடமாற்றம் செய்ததமையை கண்டித்தும், அந்த இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரியும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இன்று காலை 8 மணி முதல் நாளை காலை 8 மணி வரை இந்த வேலை நிறுத்தம் நடைபெறும்.

## விளையாட்டு நிகழ்வு

வலி. கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- யங் ஸ்ரார் எதிர் உதயசூரியன்.

★ 4 30 மணி:- கொய்யாத்தோட்டம் எதிர் றோயல். (உ)

★ ★ ★

யாழ்ப்பாணம் மிட்ரவுண் றோட்டறக்ற் கழகம் நடத்தும் — ஆறு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 1-00மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இச்சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தொடர்ந்து நாளையும் நாளை மறுதினமும் காலை 8-00 மணிமுதல் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளன.

23 அணிகள் இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுகின்றன. (உ)

நீர்வேலி

தேன்துளி இனிப்புத் தொழிற்சாலை

## ஊழியர் கவனத்திற்கு

மேற்படி தொழிற்சாலை தற்போது, கோப்பாயிலுள்ள சுரபித் தொழிற்சாலைக் கட்டடத்தில் இயங்கவுள்ளது. எனவே, மேற்படி தேன்துளி இனிப்புத் தொழிற்சாலை ஊழியர்கள் அனைவரும் 14-10-95 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு முன் சுரபித் தொழிற்சாலைக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பொதுமுகாமையாளர்,
உணவு பதனிடல் பகுதி,
த. பொ. மே. நிறுவனம்.

சுரபி தொழிற்சாலை,
கோப்பாய்.

(சி/2461)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் பொன்னையா கனகசபை

தாயின் மடியில்: 19 — 10 — 1924

ஆண்டவன் அடியில்: 14 — 09 — 1995

"ஆலமரமாய் நிற்கையிலே நாம்
ஒரு போதும் அழுததில்லை
வேரோடு வீழ்ந்தீர்கள் இன்று
நாம் விம்மி அழுகின்றோம்
நிஜமாக வாழ்ந்திருந்த நின் மனையில்
நீர் நிழலாகி நிற்பதென்ன?
ஆறாத துயரோடு நாம்
அலறி அழுகின்றோம்
தேடுகிறோம் தேடுகிறோம்
தேவனடி, சேர்ந்தீரோ
விடை தெரியா நம் துயரம்
விலகிடுமோ இறையருளால்"

தங்கள் ஆத்மா இறையடி சேரப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மகன், உறவினர்கள்.

45, கேசாவில் பிள்ளையார் கோவிலடி,
வண். மேற்கு.
யாழ்ப்பாணம்.

(38980)

## புதிய கிக்ஸ் அக்கடமி

மனோகராச் சந்தி,
யாழ்ப்பாணம்

A/L 96
DAY CLASS

பகல் நேர வகுப்பு

வர்த்தக பிரிவு

ஆரம்பம்: 13 - 10 - 95
இன்று காலை 8 மணி

(38982)

## விசேட கலந்துரையாடல்

சகல துறை வணிக நிலைய உரிமையாளர்களுக்கும், ஊழியர்களுக்குமான விசேட கலந்துரையாடல்:-

இடம்:- யாழ். இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபம்
காலம்:- 13-10-95 வெள்ளிக்கிழமை
நேரம்:- பிற்பகல் 3, 00 மணி

தற்போதைய போர்க்கால சூழ்நிலையை விளக்கப்படுத்தியும், அதற்கேற்ப எம்மை தயார்படுத்தும் விதம் பற்றியும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் வந்து கொண்டு உரையாற்ற உள்ளதால் சகலரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு:-
சகல வணிக நிலைய உரிமையாளர்கள் வரவு பதிவில் எடுக்கப்படும்.

(சி/2463)

யாழ். வணிகர் கழகம்

வலி. கிழக்கு (தெ. ப.) ப. நோ. கூ. சங்கம்

# அறிவித்தல்

இராணுவ நடவடிக்கை காரணமாக மேற்படி சங்கத்தினால் மூடப்பட்ட கிளைகள் கீழ்க்குறிப்பிடும் கிளைகளுடன் இணைக்கப்பட்டுள்ளதால், குறித்த கிளையின் பாவனையாளர் தத்தம் பங்கீட்டுப் பொருட்களை இணைக்கப்பட்ட கிளையில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

| | இணைக்கப்பட்ட கிளை | | இணைக்கப்பட்ட இடம் |
|---|---|---|---|
| 1. | அச்செழு | கிளை இல. 01 | கோப்பாய் சந்தி கிளை இல. 12 |
| 2. | " | " 02 | |
| 3. | நீர்வேலி வடக்கு | " 03 | |
| 4. | நீர்வேலி விக்னேஸ்வரா | கிளை இல. 04 | கோப்பாய் விநாயகர் கிளை இல. 13 |
| 5. | " மத்தி | " 05 | |
| 6. | " சந்தி | " 06 | |
| 7. | நீர்வேலி வடக்கு இராசவீதி | கிளை இல. 07 | கோப்பாய் அம்பாள் கிளை இல. 15 |
| 8. | " தெற்கு | " 08 | |
| 9. | " கோவிலடி | " 09 | |
| 10. | " பூதர்மடம் | " 10 | கோப்பாய் மத்தி கிளை இல. 17 |
| 11. | " ஈஸ்வரன் | " 11 | |
| 12. | நீர்வேலி கிளை இல. 07 இன் நிவாரணம் | | — கோப்பாய் மத்தி கிளை இல .18 |
| 13. | ஊரெழு கிளை இல. 31 | | — ஊரெழு கிளை இல. 30 |

★ 'அ', 'இ', 'உ' உலர்உணவு அட்டைகளை மேற்குறித்த கிளைகளில் பெற்றுக்கொள்ளும்படி பாவனையாளர்கள் கேட்கப்படுகின்றனர்.

பொது முகாமையாளர்

நீர்வேலி
11-10-1995

(சி/2462)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகர்கோவில் குண்டு வீச்சு மூலம்

# மாணவரை கொலை செய்தமைக்கு

# யுனெஸ்கோ பலத்த கண்டனம்

நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீது கடந்த மாதம் ஸ்ரீலங்கா விமானப்படையின் புக்காரா விமானம் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு ஐ.நாவின் கல்வி விஞ்ஞான கலாசார அமைப்பான யுனெஸ்கோ அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

பாடசாலை மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலை யுனெஸ்கோ அமைப்பின் பணிப்பாளர் நாயகம் பற்றிக்கோ மேயர் கண்டித்துள்ளார்.

ஐ. நாவின் கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பான யுனெஸ்கோவின் பாரிஸில் உள்ள தலைமையகம் கடந்த வாரம் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் அப்பாவிச் சிறுவர்களைப் பலியெடுத்த குண்டுவீச்சு சம்பவத்தை நான் மிக வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று அந்த அறிக்கையில் பற்றிக்கோ மேயர் தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் உள்நாட்டு அரசியல் நிலை எவ்வாறு இருப்பினும், அங்குள்ள முக்கிய வளங்களாகக் கருதப்படும் கல்வி நிறுவனங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை எதன்மூலமும் நியாயப்படுத்திவிட முடியாது — என்றும் அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சு சம்பவத்தைக் கண்டித்து ஐ. நாவின் துணை அமைப்பு ஒன்று அறிக்கை வெளியிட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். (ஐ-எ)

# அவசரப்பட்டு வெளியிட்ட அறிக்கை; யுனெஸ்கோ மீது அரசு பாய்ச்சல்!

கொழும்பு, ஒக். 13

நாகர்கோவில் மகாவித்தியாலயம் மீதான புக்காரா குண்டு வீச்சைக் கண்டித்து யுனெஸ்கோ நிறுவனம் அறிக்கை வெளியிட்டதற்கு அரசு தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

பாரிஸில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக வெளிவிவகார அமைச்சு இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

பாடசாலை மீது குண்டு வீசப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து பிழையான ஆலோசனையின் பேரில் பாரிஸில் உள்ள யுனெஸ்கோ தலைமையகத்தின் பணிப்பாளர் அவசரப்பட்டு கருத்து வெளியிட்டுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது

யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகத்தின் கருத்துக்களைப் போன்று முன்பு எவருமே கூறியதில்லை என அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயர் மட்ட ஐ நா. சபை அதிகாரிகள், அங்கத்துவ நாடுகளைக் கண்டிக்கும் அல்லது பகிரங்கமாக விமர்சிக்கும் வழக்கம் என்றுமே இருந்ததில்லை என்றும் அவர் கூறினார்.

இது குறித்து அவசரமாகக் கருத்து வெளியிட முன் யுனெஸ்கோவோ அல்லது அதன் பணிப்பாளரோ சரியாக நிலைமையை ஆராயவில்லை — என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகத்துக்கு இது குறித்த தகவல் மூன்றாம் நபர் ஊடாகவே கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ-எ)

## பொதுக் கலாசாரம் உருவாக எழுத்தாளர் முயற்சி தேவை

### ஜனாதிபதி சந்திரிகா வலியுறுத்து

கொழும்பு, ஒக். 13

ஸ்ரீலங்காவில் பொதுவான கலாசாரம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இதனை எழுத்தாளர்களும் கலைஞர்களும் கருத்தில் கொண்டு அதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

கடந்த பத்து வருடங்களில் அதிக எண்ணிக்கையான நூல்களை வெளியிட்ட பதிப்பக உரிமையாளர்களையும், அதிக நூல்களை எழுதிய எழுத்தாளர்களையும் கௌரவிக்கும் விழா ஒன்று நடைபெற்றது.

அந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே சந்திரிகா மேற்கண்டவாறு சொன்னார்.

சிங்களவர்கள், தமிழர்கள் முஸ்லிம்கள் ஏனையோரினதும் கலாசாரங்கள் பேணப்பட வேண்டும். அவற்றின் தனித்துவம் பேணப்பட வேண்டும்—

அதேவேளை 21 ஆம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்துவதற்கென ஸ்ரீலங்காவுக்கான பொதுவான கலாசாரம் ஒன்று உருவாக்கப்படுவது அவசியம்—

இது விடயத்தில் எழுத்தாளர்களும், கலைஞர்களும், சேர்ந்து உழைக்க வேண்டும்— என்று அவர் தெரிவித்தார். (அ)

## பாண் வாங்க அதிகாலையே பேக்கரி முன் கூடும் மக்கள்

குடாநாட்டில் மாவுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து பேக்கரிகளின் முன்னால் காலையும் மாலையும் மக்கள் நீண்ட வரிசையில் காத்துக்கிடக்கின்றனர்.

அதிகாலை வேளையிலேயே மக்கள் பேக்கரிகளுக்கு முன்னால் கூடத் தொடங்கி விடுகின்றனர் வரிசையில் காத்து நிற்கும் பலர் பாண் கிடைக்காமலும் கூட ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலையும் ஏற்படுகிறது மாலையிலும் இதே பாடுதான்.

தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ள மக்களும் மா மற்றும் பாண் தட்டுப்பாட்டால் பெரிதும் கஷ்டங்களை அனுபவிப்பதாக அறிவிக்கப்படுகிறது. [ஒ-15]

## வெள்ளை பிரம்பு தின விழா

தென்மராட்சி, ஒக். 13

லயன்ஸ், லியோ கழகங்களின் மானிப்பாய், சாவகச்சேரி, சுன்னாகம், கோப்பாய் ஆகிய பிரிவுகள் ஒன்றிணைந்து நடத்தும் வெள்ளைப் பிரம்பு தின விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் லயன்ஸ் கழக வலயத் தலைவர் லயன் எஸ். எஸ். தம்பிராசா தலைமையில் நடைபெறும்.

வெள்ளைப் பிரம்பு பெறுபவர்கள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலிருந்து சாவகச்சேரி நகர்ப் பகுதியூடாக விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்படுவர்.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். (எ-117)

## குருதிக் கொடை

வடமராட்சி, ஒக் 13

மந்திகை ஆஸ்பத்திரியில் பணிபுரியும் பிரான்ஸ் வைத்தியக் குழுவைச் சேர்ந்த இருவர் குருதிக் கொடை செய்தனர்.

இக் குழுவைச் சேர்ந்த இருவரும் தலா ஒரு பைந்த் வீதம் இவ் வைத்தியசாலையிலுள்ள இரத்த வங்கிக்கு குருதிக்கொடை செய்தனர்.

## 'வர்த்தகி' மலர் வெளியீடு

யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் "வர்த்தகி" மலர் வெளியீடும், வணிக தின விழாவும் இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. [எ]

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 13

தென் இந்தியத் திருச்சபை யாழ் பேராயத்தின் தொழிற்பயிற்சி நிலைய கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று மாலை 4மணிக்கு 4ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் உள்ள நிலையத்தில் செயல்திட்டப் பணிப்பாளர் திரு. என். எஸ். பி. தம்பு தலைமையில் நடைபெறும். [எ]

# இராணுவ அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுதலை இயக்கத்தை நசுக்க முடியாது

## வன்னியசிங்கம் அன்று சொன்னது இன்றும் பொருந்தும்

இன்று ஒக்ரோபர் 13ஆம் திகதி. அமரர் கோப்பாய்க் கோமகன் வன்னியசிங்கத்தின் 85ஆவது பிறந்த தினமாகும்.

தமிழ் மக்களின் மொழியுரிமைப் போராட்டம் பற்றி அவர் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஆற்றிய உரைகள் தேசிய விடுதலைப் போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்வதற்கு துணைபுரியக் கூடியவை.

அமரர் வன்னியசிங்கத்தின் அன்றைய கருத்துரைகள் பல இன்றைய காலச் சூழலுக்கும் பொருத்தமானவையாக உள்ளன.

அவற்றில் சில இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

"அயலார், அடுத்தவர் குழந்தையைப் பிரசவித்துத் தரவியலாது. வயிறு நொந்தும் பிள்ளையை அவளே (தாயே) பெற வேண்டும். அயலவர் வேண்டுமாயின் பிரசவ வேதனையைத் தணிப்பதில் மருத்துவச்சியாக உதவுதல் கூடும்." — என்பது அவரது கருத்துக்களில் முக்கியமானதாகும்.

சிங்களம் மட்டுமே உத்தியோக மொழி எனும் நிலையைக் கொண்டு வந்த பின்னர் நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கும் அதே கொள்கையை விஸ்தரிப்பதற்கு பண்டாரநாயக்க அரசு முயன்ற வேளையில் அமரர் வன்னியசிங்கம் ஆற்றிய உரையின் ஒரு பகுதி வருமாறு —

"...ஆனால் எங்களுக்கு எங்கள் மொழி முக்கியமானது; விழியிலும் மேலானது! எங்கள் மொழிக்கு இழைக்கப்படும் அநீதியைச் சகிக்க மாட்டோம். அவ்விதம் தொடர்ந்து நடந்தால் பிரிந்து போவதைத் தவிர வேறு வழி எமக்கில்லை!

இம்மசோதாவும் "சிங்களம் மட்டும் சட்டத்தின் வழியில் தான் அமைந்திருக்கிறது. தமிழ்ப் பிரதிநிதிகளுக்குத் தமிழில் கடிதம் அனுப்ப இம் மசோதா வழி செய்யவில்லை. சிங்களம் தெரிந்த வர்களைத்தான் ... தெரிந்தனுப்ப வேண்டும் என்று கூற உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? தென் ஆபிரிக்காவின் வழிக்குத்தான் இலங்கையை இச் சட்டம் இட்டுச் செல்லும். இம் மசோதா நிறைவேற்றப்பட்டு சபை நடவடிக்கைகள் சிங்களத்தில் நடைபெற்றால் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு இங்கு வேலை இல்லை. அவர்கள் வெளியேறி வேறு சபைகளை உருவாக்க வேண்டியது தான். தனி இராச்சியம் அமைக்க வேண்டியது தான்"

உரிமைக்காகக் குரல் கொடுத்துவரும் தமிழ் மக்கள் மீது இராணுவத்தைக் கட்டவிழ்த்து விட்டால் என்ன நடக்கும் என்பது பற்றி அவர் இவ்வாறு கூறினார்.

"ஒரு சிலரை அடித்து வீழ்த்துவதாலும், அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதாலும், இராணுவத்தை முரட்டுத்தனமாக உபயோகிப்பதாலும் தமிழ் ... நசுக்கிவிடலாம் என்று நினைத் தால் அது இந்த அரசாங்கம் செய்யும் முட்டாள்தனமான முடிவாகவே இருக்கப்போகிறது'' —என்றார் பிறிதொரு சந்தர்ப்பத்தில் "வெறிநாய்களுக்கு முன் யாரும் சத்தியாக்கிரகம் செய்ய மாட்டார்கள். துவக்கை எடுத்துச் சுடத்தான் செய்வார்கள்" என்று அவர் கூறினார்.

### எது தேசத் துரோகம்?

"மற்றொரு மொழிக்குக் கேடு பயக்காது, சிங்கள மொழியுடன் தமிழ் மொழிக்குச் சம உரிமை வேண்டுமெனப் போராடுவது தேசத் துரோகமானால்;

எமது மரபுவழித் தாயகத்தின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு முதலியன சிங்களப் படையெடுப்பால் அழிந்தொழியாது இருக்கப் போராடுவது தேசத் துரோகமென்றால்;

இந்த நாட்டையே தாயகமாகக் கொண்டு அதன் வருவாயின் நூற்றுக்கு அறுபது சத வீதத்தை நல்கும் தமிழ்த் தொழிலாளர்களது குடியுரிமை, வாக்குரிமைக்குப் போராடுவது தேசத் துரோகமென்றால்;

இதே, தமிழ்த் தொழிலாளர்களது அடிமை நிலையைப் போக்கப் போராடுவது தேசத் துரோகமென்றால்;

இன்று இலங்கையில் உள்ள அரசியல் அமைப்பை மாற்றி கூட்டாட்சி அடிப்படையில் அதிகாரத்தைப் பகிர்ந்து, அதே நேரத்தில் நாட்டைப் பிளக்காது, ஓர் அரசியல் அமைப்புக்கு வழிகோல நாம் அறப்போர் தொடுப்பது தேசத் துரோகமென்றால் —

இத்தனை தேசத் துரோகங்களையும் மொத்தமாக நிறைவேற்றி, அதன் பலாபலன்களை மகிழ்ச்சியோடு அனுபவிப்பேனே ஒழிய, எனது இனம், ஒவ்வொரு திருப்பத்திலும், இழித்துப் பழிக்கப்பட்டு, சிதைந்து சீரழிந்து, காலப் போக்கில் அழிந்து போவதைச் சகிக்க மாட்டேன்! இனத்தின் உரிமைக்காகப் போர் தொடுப்பதால் தேசத் துரோகியெனக் குற்றஞ் சாட்டப்பட்டு தூக்குக் கயிற்றில் தொங்கவிடப்படுவதையே நான் வரவேற்கிறேன்". (க)

—இன்பரசு—

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இத்தாலி லம்பிறெற்றா (Italy Lambretta) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 525/1. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (மின்க்கவைத் அருகில்) (38971)

40 நாட்கள் நிரம்பிய அழகிய பொமனேரியன் நாய்க் குட்டிகள், நவீன சணான் கடாக்குட்டிகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: ஆனந்தி, இல 167/5, கோவில் வீதி, நல்லூர் வடக்கு [38961]

புதிய முதிரை நிலை, பாலை யன்னல்கள், தேக்கம் பலகைகள், முதிரைப் பலகைகள், திராந்கள் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: இல 1, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (38975)

### வீடு விற்பனைக்கு

2 பரப்பு காணியில் அமைந்திருக்கும் வீடு விற்பனைக்கு உண்டு. பிரபல ஆண், பெண் பாடசாலைகள், யாழ். செயலகம், தனியார் மருத்துவ மனைக்கு அருகில் உள்ளது விலாசம்: 30 சுவாமீஸ் லேன், சுண்டிக்குளி (சுண்டி வீதியில் உள்ள முன்னைய ஆசீர்வாதம் அச்சகம் முன்பாக) (8661)

### சோதிடம்

ஜாதகம் கணிக்க கல்வி, திருமணம், பிரயாணம், எதிர்கால பலன் அறிய ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல. 361, பருத்தித்துறை வீதி நல்லூர். (38973)

### வணிக புள்ளி விபரவியல்

வணிக புள்ளி விபரவியல் க. பொ. த. உயர்தரம் பகுதி I ஆக்கம் ர. ஜ் எஸ் குகன் B Sc. செ. ஜெயரங்கன் B Sc. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி–2456)

### ஜெனறேற்றர்

புதிய ஜெனறேற்றர் [ஹெண்டா 600] விற்பனை உண்டு. தொடர்பு: லக்சுமி நகைமாடம், கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம் [38965

### புலமைப்பரிசில்

ஆண்டு – 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான அடிப்படைக் கல்வி 1995 முதல் நடைமுறைக்கு வரும் புதிய பரீட்சைத் திட்டத்துக்கு அமைவான வழிகாட்டியும் வினா விடைக் கொத்தும், ஆக்கம்: சி. என் எஸ் உதயச்சந்திரன் வெளியீடு: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி–2400)

### மணப்பெண் தேவை

யாழ் இந்து, சாவகச்சேரியைச் சேர்ந்த, ஐரோப்பிய நாட்டில் எட்டு வருடங்களாக தொழில் புரியும் படித்த, ஒழுக்கமுள்ள, 28 வயது, மூலம் 2ஆம்பாதம், குற்ற மற்ற மணமகனுக்கு மணப்பெண் தேவை. தொடர்பு: நா. சிறீரங்கநாதன், மிருக வைத்திய உத்தியோகத்தர், தபாற்கந்தோர் வீதி, பெருங்குளம்சந்தி, சாவகச்சேரி. (38946)

## திருட்டு சைக்கிள்கள் மீட்பு

சாவகச்சேரி கொடிகாமம் பகுதியில் சாவகச்சேரி காவல்துறையினரால் நடத்தப்பட்ட திடீர் பரிசோதனைகளின் போது யாழ் குடாநாட்டில் திருடப்பட்ட சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவை அந்தந்தப் பிரிவு காவல் பணிமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஓ–117)

---

# தமிழீழ வைப்பகம்

BANK OF TAMILEELAM

## பணிநிலை வெற்றிடம்

பின்வரும் பணிநிலைகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் (விண்ணப்பங்கள்) கோரப்படுகின்றன. வேண்டுகைகளை தமிழீழ வைப்பகத்தின் சகல கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வேண்டுகைகள் வேண்டுகையாளரின் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

**1. அலுவலர் (பயிலுநர்)**

தகைமைகள்:

பல்கலைக்கழக சிறப்புப் பட்டதாரிகள் அல்லது பட்டயக்காரர் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி அடைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

ஊதியத் திட்டம்:

1800 — 5800 (100 X 10) (150 X 20) + 2700 (4500-8500)

அகவை எல்லை: 22 - 30

**2. மேற்பார்வையாளர் (பயிலுநர்)**

தகைமைகள்:

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

ஊதியத் திட்டம்;

1300 — 3300 (100 X 20) + 2700 (4000 - 6000)

அகவை எல்லை; 22 — 30

**3. இளநிலை எழுதுநர்/உதவிக் காசாளர்**

தகைமைகள்:

க. பொ. த. [சாதாரண] தேர்வில் கணிதம், தமிழ் உட்பட 5 திறமைச் சித்தியுடன் குறைந்தது 6 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க. பொ. த. [உயர்தர] தேர்வில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

ஊதியத் திட்டம்;

900 — 1900 (50 X 20) + 2700 [3600 — 4600]

அகவை எல்லை: 19 — 30

**4. தட்டெழுத்து – சுருக்கெழுத்தாளர் [தமிழ்]**

தகைமைகள்:

க. பொ. த [சாதாரண] தேர்வில் கணிதம், தமிழ். தட்டெழுத்து சுருக்கெழுத்து ஆகிய பாடங்களில் திறமைத் தேர்ச்சியுடன் குறைந்தது 6 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். க. பொ த [சாதாரண] தேர்வில் தட்டெழுத்து சுருக்கெழுத்து பாடத்தில் தேர்ச்சி இல்லாதோர் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தொழில்நுட்பக்கல்லூரியினால் நடத்தப்பட்ட தட்டெழுத்து, சுருக்கெழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

ஊதியத்திட்டம்:

900 — 1900 (20 X 50) + 2700 (3600 — 4600]

அகவை எல்லை: 19 — 25

**5 சிற்றூழியர் - ஆண்**

தகைமைகள்:

க. பொ. த (சாதாரண) தேர்வில் குறைந்தது ஒரே அமர்வில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

ஊதியத்திட்டம்:

500 — 1300 (40 X 20) + 2700 (3200 — 4000)

அகவை எல்லை: 19 — 25

வேண்டுகைகள் யாவும் 05-11-95இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக இடது பக்க மேல்மூலையில் பணிநிலை வேண்டுகை எனக் குறிப்பிடப்பட்டு நேரில் அல்லது தபால் மூலம் பணிப்பாளருக்கு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பணிப்பாளர்,
தமிழீழ வைப்பகம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[சி-2457]

---

# ஜி. எல். பீரிஸுக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை

## ஐ. தே. கட்சி கொண்டு வரும்

கொழும்பு, ஒக். 13


நீதி அரசமைப்பு அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான ஜி. எல். பீரிஸுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதென ஐ. தே. கட்சி தீர்மானித்துள்ளதாக "யுக்திய" பத்திரிகை தெரிவிக்கிறது.

ஹில்டன் ஹோட்டல் கொடுக்கல் வாங்கல் தொடர்பான புதிய ஒப்பந்தம் மற்றும் ஜனாதிபதி முறையை ஒழிப்பது என அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை மீறியது தொடர்பான விடயங்கள் குறித்தே ஐ. தே. கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயங்கள் தொடர்பான தகவல்களை ஒன்று திரட்டி நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தயாரிக்குமாறு ஐ. தே. கட்சியின் தலைமைப்பீடம் அதன் சட்டப் பிரிவைப் பணித்துள்ளதாக அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஓ-10)

---

# பிறந்த நாள் வாழ்த்து



## ★ செல்வன் கிசோர் ★

சரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடியைச் சேர்ந்த
சிவநேசராசா - தவமலர்
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
கிசோர்

தனது பிறந்த நாளை 13 - 10 - 1995 இல் கனடா ரொரன்ரோவில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

அப்பா, அம்மா (கனடா), அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பூட்டி, மாமா, மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் (இலங்கை), சித்தப்பா, மாமா, மாமிமார் (கனடா), சித்தப்பா (சுவிஸ்), மாமா (பிரான்ஸ்), மாமா (லண்டன்), மாமா (இந்தியா), சரணவாய் மூத்தவிநாயகர் அருள் பெற்று சீரும் சிறப்புமாக நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

சி. விசுவலிங்கம்,
(பேரன்)

[38932]

---

# பரிசளிப்பு விழா -1995

இணுவில் இந்துசமய வளர்ச்சிச் சங்கம், இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை இணைந்து நடத்திய சைவ சமய அறிவுப்போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றின் பரிசளிப்பு வைபவம் நாளை [14 - 10 - 1995] சனிக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு சைவப் பணிமனையில் நடைபெறும்

நன்றி

இணுவில் கந்தசுவாமி கோயில்
இளந்தொண்டர் சபை.

(38974)

---

# தொழிநுட்பக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்கள் - 1996

யாழ்ப்பாண தொழிநுட்பக் கல்லூரியில் 1996ஆம் கல்வியாண்டிற்குரிய பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பகுதிநேர விரிவுரையாளருக்குரிய பாடங்களையும், மாதிரி விண்ணப்பப் படிவத்தினையும் கல்லூரி நாட்களில் கல்லூரி விளம்பரப்பலகையில் பார்வையிடலாம். முடிவு திகதி 03 - 11 - 1995

க. ஜெயரத்தினம்,
அதிபர்.

தொழிநுட்பக்கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
10 - 10 - 1995.

(சி–2459)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன நாட்டுடனான ஒப்பந்தத்துக்கு புறம்பாக

# அரசாங்கம் பெரிய அளவில் ஆயுத வியாபாரம்

## பொது நிதி கொள்ளையிடப்படுவதாக 'யுக்திய' தெரிவிக்கிறது

கொழும்பு, ஒக். 13

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தின்போது ஆயுத வியாபாரத்தில் கோடிக்கணக்காக தரகுப்பணம் (கொமிஷன்) பெறப்பட்டது போலவே, பொ. ஐ. மு. அரச அதிகாரிகளின் உறவினர்களும் பொதுநிதியைக் கோடிக்கணக்கில் கொள்ளையிட ஆரம்பித்துள்ளனர் என்று ''யுக்திய'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

சந்திரிகா அரச ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் யுத்த ஆயுத வியாபாரத்திற்காக பெருமெடுப்பில் பிரசாரத்தை மேற்கொண்டது. ஆயுதக் கொள்வனவின்போது அரசுகளுக்கு இடையே மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கலைத் தவிர முகவர்கள் ஊடாக ஆயுதக் கொள்வனவுகளை மேற்கொள்வதில்லை என்றும் தெரிவித்திருந்தது.

ஆட்சிக்கு வந்த உடனேயும் ஜனாதிபதி சந்திரிகா இவ்விடயத்தில் கவனம் செலுத்தினார். இருப்பினும் கிடைக்கின்ற அறிக்கைகளின்படி மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டுள்ளது.

சீனாவிலுள்ள நொரின்கோ நிறுவனத்தினால் இலங்கைக்கு விநியோகிக்கப்படும் ஆயுதங்கள் தொடர்பாக சீன அரசுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்குமிடையே 1993 நவம்பர் மாதத்தில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

இதன்படி 1995 ஜூன் மாதத்தில் 155 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை வழங்கும்படி ஸ்ரீலங்கா இராணுவத்தினால் நொரின்கோ நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டது. அந்த நிறுவனத்தின் ஆசிய பகுதிப் பிரதிநிதி பொறுப்பாளர் லீ ஹாய் டொங் கொழும்புக்கு வந்து அரசின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சுவீனமுற்று இருந்ததால் ஜனாதிபதியின் செயலாளர் பாலபத்தபெண்டியை சீனப் பிரதிநிதி சந்தித்துள்ளார். ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு அவ்வளவு ஆயுதங்கள் தேவையில்லை எனவும் 100 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை வழங்கினால் போதுமெனவும் அவர் அப்போது தெரிவித்தார்.

ஆனால் கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின்படி, 250 கோடி பெறுமதியான ஆயுதங்கள் நொரின்கோ நிறுவனத்தின் ஹொங்கொங் முகவர்களின் ஊடாகப் பெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் மீறப்பட்டதற்கு இதன் பின்னணியில் ஸ்ரீலங்காவில் உயர்பதவியில் உள்ள ஒருவரின் மகன் செயற்படுகிறார் என முன்னணி வியாபாரிகள் பேசிக்கொள்கிறார்கள் என 'யுக்திய' தெரிவிக்கிறது.

இதற்கிடையில், தற்போது அமுலில் உள்ள போர் தொடர்பான செய்திகளின் தணிக்கையை ஆயுத வியாபாரிகள் தமக்கு சாதகமாக்க முயன்றுவருவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஒ 10)

# அச்சுவேலி ப. நோ. கூ. ச. கிளைகள் தென்மராட்சியில்

அச்சுவேலி, ஒக். 13

வலி-கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் செயற்பாடுகள் தென்மராட்சிப் பகுதிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

6 கிளை நிலையங்கள் ஊடாக சங்கப் பிராந்தியத்தில் செயற்பட்ட 24 கிளை நிலையங்களின் சேவையும் நடைபெறுகின்றன.

சாவகச்சேரியில் செயற்படும் கிளையில் 12, 04, 10, 22ஆம் இலக்க கிளைகளின் உறுப்பினர்களுக்கும்—

நுணாவில் சந்தியில் செயற்படும் கிளையில் 15, 19, 13, 20ஆம் இலக்க கிளைகளின் உறுப்பினர்களுக்கும்—

பெருங்குளம் சந்தியில் செயற்படும் கிளையில் 23, 17, 02, 03ஆம் இலக்க கிளைகளின் உறுப்பினர்களுக்கும்—

கைதடிக் கந்தசாமி கோயிலடியில் செயற்படும் கிளையில் 18, 06, 08, 14ஆம் இலக்க கிளைகளின் உறுப்பினர்களுக்கும்—

மட்டுவில் அம்மன் கோயிலடியில் செயற்படும் கிளையில் 21, 07, 26, 09ஆம் இலக்க கிளைகளின் உறுப்பினர்களுக்கும்—

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தடியில் செயற்படும் கிளையில் 11, 16 24, 25ஆம் இலக்க கிளைகளின் உறுப்பினர்களுக்கும் பங்கீட்டுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

சங்க தலைமைக்காரியாலயம் கனகம்புளியடிச்சந்தியில் தனியார் இல்லம் ஒன்றில் செயற்படுகின்றது (ஒ-11)

## பாராட்டு வைபவம்

யாழ்ப்பாணம், ஒக். 13

அனர்த்த காலத்தில் அல்லலுற்ற மக்களுக்கு பெரும் சேவையாற்றிய எம். எஸ். எவ். வைத்தியர்கள் மந்திகை ஆஸ்பத்திரி வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள், செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் ஆகியோரை பாராட்டும் வைபவம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, புலோலி வணிகர் கழக பணிமனையில் நடைபெறும்.

முன்வந்து உதவும் கரங்கள் அமைப்பின் ஆதரவில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடாகி இருக்கின்றது. (ஒ)

## பயிலுநர் ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 13

கோப்பாய், மருதனார்மடம், வட்டுக்கோட்டை ஆகிய தொலைக்கல்வி நிலையங்களைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர்களை தமக்குரிய நிலையங்களிலும்—

தெல்லிப்பளை தொலைக்கல்வி நிலையப் பயிலுநர் ஆசிரியர்களை இணுவில் மத்திய கல்லூரியிலும்—

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குக் கூடுமாறு, சிரேஷ்ட போதனாசிரியர்கள் அறிவிக்கின்றனர். (எ)

## உடுவிலில் பாதுகாப்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாளை சனிக்கிழமை உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் பிற்பகல் 3-30 முதல் 5-30 மணிவரை—

உடுவில் ஜே/182, ஜே/183, ஜே/184, ஜே/185, ஜே/186, ஜே/187, கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து பாதுகாப்பு நிதி சேகரிக்கப்படும். (ஒ-க)

## புலிகளின் குரல் வானொலியில்

13 - 10 - 1995
வெள்ளி இரவு

- ★ 8-02 — கலைமஞ்சரி அறிமுகம் ''கச்சதீவு அன்றும் இன்றும்'' ஆய்வுநூல், சிறுகதை- ந. கோகுலன் எழுதிய ''தப்புக்கணக்குகள்'' கவிதை- கா. சுஜந்தன் எழுதிய ''காப்பரண்''
- ★ 8-25 — கணப்பொழுது - போராளி நவகரன் எழுதிய ''வீரவேங்கை கரிகரன்''
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — அரசியல் அரங்கம் - வே. பாலகுமாரன் எழுதிய ''விடுதலையின் திறவுகோல்''
- ★ 8-50 — ஈர்முனை-''அன்னாசிச்செய்கை'' உரைச்சித்திரம்

14 - 10 - 1995
சனி காலை

- ★ 7-02 — மாவீரர் [illegible]
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து நீங்கள் கேட்டவை

## தமிழீழ வானொலியில்

வெள்ளி மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5 02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — கணநேரக்காவியங்கள்
- ★ 5-30 — மண்ணின் குரல்
- ★ 5-40 — நேயர்கடிதங்கள்
- ★ 5-45 — நாடகம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — வெற்றிச்சுவடுகள்
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள் தொடர்ந்து என்தெரிவு

### வடமராட்சியில் பலியானோரின்

# மரணச் சான்றிதழ்களை பெறமுடியாது மக்கள் அவதி

வடமராட்சியில் விமான, ஷெல் தாக்குதல்களினால் இறந்தோர்களின் மரணச் சான்றிதழ்களைப் பெற முடியாது அவர்களின் உறவினர்கள் அலைந்து திரிவதாக அறியவருகிறது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி முதல் வடமராட்சி, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற விமான, ஷெல் தாக்குதல்களால் பலியானவர்களின் மரணச் சான்றிதழ்களைப் பெறுவதற்காக அவர்களின் உறவினர்கள் மந்திகை ஆஸ்பத்திரிக்குச் செல்கின்றனர்.

ஆனால் மரணச் சான்றிதழ்களை உறுதிப்படுத்தும் வேலை பூர்த்தி செய்யப்படாமையால் இறந்தவர்களின் உறவினர்கள் அவற்றை பெற முடியாதிருக்கிறதென தெரியவருகிறது. (ஓ-க-173)

# வடமராட்சி கிழக்கு பகுதியில் வேகமாக பரவும் மலேரியா

வடமராட்சி கிழக்கில் மலேரியா நோய் மிகவும் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வயிற்றோட்டம், வாந்திபேதி ஆகியனவும் அங்கு பெருகி வருகின்றன. இந்நோய்களைத் தடுக்க கொதித்தாறிய நீரைப் பருகுமாறு மருதங்கேணி வைத்திய அதிகாரி டாக்டர் தனபாலசிங்கம் மக்களைக் கேட்டுள்ளார்.

இதேவேளை, இப்பகுதிக்கு பல் சிகிச்சை டாக்டர்கள் வராமல் இருக்கின்றபடியால் நோயாளிகள் மிகவும் சிரமப்படுவதாகவும் டாக்டர் தனபாலசிங்கம் கவலை தெரிவித்தார். (ஓ-க-36)

# பிரான்ஸ் நாட்டின் பிரச்சினைகளை எடுத்துக்காட்டும் வேலை நிறுத்தம்

பிரான்ஸ் நாட்டில் 50 லட்சம் அரசாங்கத் தொழிலாளர்கள் கடந்த 10 ஆம் திகதி நடத்திய 24 மணிநேர பொது வேலை நிறுத்தம் பிரான்ஸ் நாட்டுப் பொருளாதார நிலைமை, ஜனாதிபதி சிராக் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் ஆகியனபற்றிய பல முக்கியமான பிரச்சினைகளை முன்வைத்துள்ளது.

எதிர்வரும் ஆண்டு சம்பள உயர்வு நிறுத்தத்தை அனுசரிக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்ததை அடுத்தே அதை ஆட்சேபித்து இந்த வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது.

பிரெஞ்சு அரசாங்கம் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை எதிர் நோக்குகிறது என்றும், பிரெஞ்சு வரவு-செலவுத் திட்டத்தில் பாரிய தோர் பற்றாக்குறை ஏற்படுவதைச் சமாளிக்கவே அரசாங்கம் சம்பள உயர்வு நிறுத்தக் கொள்கையை முன்வைக்கிறது என்றும் பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் சம்பள உயர்வு நிறுத்தத்தை மட்டும் அல்ல, அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தில் பல வெட்டுக்களையும் செய்ய உள்ளது என அஞ்சப்படுகிறது.

அதுவேதான் தமக்குள்ளே இடைவிடாமல் அடிபட்டுக் கொண்டிருந்த பிரெஞ்சுத் தொழிற்சங்கங்கள் ஒன்றுபட்டு வேலை நிறுத்தத்தை நடத்தியுள்ளன.

### மிகப் பெரிய வேலை நிறுத்தம்

கடந்த 10 ஆண்டுகளில் நடந்த மிகப்பெரிய வேலை நிறுத்தமாக இது கருதப்படுகிறது.

60ஆம் ஆண்டுகளின் இறுதியிலும் 70ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் பிரான்ஸில் நிகழ்ந்த கொந்தளிப்பான காலம் மீண்டும் அங்கே ஏற்படலாம், அதற்கு இந்த வேலை நிறுத்தம் ஒரு பீடிகையாக அமையலாம் என்று கூட பிடப்பட்டுள்ளது.

வேலையின்மையை நீக்குதல், பொருளாதார வலுவை ஏற்படுத்துதல், பிராங் நாணயத்தைப் பலப்படுத்துதல் முதலிய பல வாக்குறுதிகளை அளித்து சிறாக் ஆட்சிக்கு வந்தார்.

ஆனால் எதையுமே சாதிக்க முடியவில்லை.

''சிறாக் ஜனாதிபதியானால் அவர் மக்களின் வெலிக்குரியவர் ஆவார்'' என்று முன்னாள் ஜனாதிபதி பிராங்கோய் மித்தெறோன் கூறியது நினைவில் கொள்ளத்தக்கது

## செய்தியின் பின்னணியில்

சில அவதானிகள் கூறியுள்ளனர்.

ஐரோப்பிய யூனியனில் ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணையும் பிரச்சினை பிரான்ஸைப் பிடித்தாட்டும் முக்கிய பிரச்சினையாகும்.

இந்தத் திசையில் ஐரோப்பா முழுவதற்கும் ஒரு நாணயம் என்ற இலக்கும் முன்னெடுக்கப்படுகிறது. இந்த இடத்தில் மற்ற ஐரோப்பிய நாணயங்களுடன் ஒப்பிடும் போது பலவீனமானதாக பிரெஞ்சு நாணயமான பிராங் இருக்கிறது.

பிரெஞ்சு ஜனாதிபதி சிறாக்கின் மதிப்பும் பெரிதும் குறைந்துள்ளது என்[illegible] சிறாக் 'வேலிக்குரியவர்' ஆகாவிட்டாலும் பரிதாபத்துக்கு உரியவர் ஆகுவார் போலத் தோன்றுகிறது.

அவருடைய அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை நாட்டின் மொத்த உற்பத்தியில் 5 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொகுப்பு - புதினன்

நாட்டின் எந்தப் பகுதியினரைப் பாதித்து சிறாக் இந்தப் பற்றாக் குறையை சமாளிப் பார் [illegible] எதிர்கால நிகழ்வுகள் [illegible]. ★

# சுழிபுரத்தில் பாவனைக்கு உதவாத மாட்டிறைச்சி

## அதனை விற்றவருக்கு எச்சரிக்கை

சுழிபுரம் சத்தியகாடு சந்தையில் இறைச்சிக் கடை ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பழுதடைந்த பாவனைக்கு உதவாத மாட்டிறைச்சி பொது சுகாதாரப் பரிசோதகரால் கண்டு பிடிக்கப்பட்டது.

அண்மையில் பொது சுகாதார பரிசோதகர் திரு. ச. ரவீந்திரன் மேற்படி சந்தையில் திடீர்ப் பரிசோதனை மேற்கொண்டார்.

அதன்போதே பாவனைக்கு உதவாத மாட்டிறைச்சி விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

அதனை அடுத்து கடை உரிமையாளர் எச்சரிக்கப்பட்டு, இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டு புதைக்கப்பட்டது. (ஓ-எ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தூர், ஆவரங்கால் பகுதிகளில்

# பெட்டிகளில் பொருள்களை அடைத்து எடுத்துச் செல்லும் படையினர்!

நாவற்குழி, ஒக். 13

புத்தூர் ஆவரங்கால் பகுதிகளில் வீடுகளில் உள்ள பெறுமதியான பொருள்களை பெட்டிகளில் அடைத்து படையினர் வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர்.

வீடுகளில் இருந்து கதவுகள் ஜன்னல்களை கழற்றி பொருள்களை எடுத்துச் செல்வதற்காகப் படையினர் பெட்டிகளைத் தயாரிக்கின்றனராம்.

இராணுவத்தின் பிடியில் இருந்த மீண்டு வந்த புத்தூர் சந்தியில் வசிக்கும் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

வீடுகளில் உள்ள தொலைக் காட்சிப் பெட்டி, வீடியோ, டெக், வானொலிப் பெட்டிகள் மற்றும் விலையுயர்ந்த மின் உபகரணங்கள் என்பனவற்றையே படையினர் பெட்டிகளில் இட்டு அடைத்துக் கொண்டு செல்கின்றனர் - என்றும் —

படை மேலதிகாரிகளின் அனுமதியுடனேயே சாதாரண சிப்பாய்கள் இந் நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு சூறையாடிய பொருள்கள் பலாலி ஊடாக காங்கேசன் துறைக்கு கொண்டு செல்லப்படுவதாக படையினரின் பிடியில் உள்ள சிலர் கூறியதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-மி)

## தேசிய பாதுகாப்பு நிதி பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 13

சங்கானை வட்டத்தில், இதுவரை தேசிய பாதுகாப்பு நிதி செலுத்த ஒப்புக்கொள்ளாதவர்களுடனான கலந்துரையாடல்கள் பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளது என்று நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

வட்டு. மேற்கு — இன்று வெள்ளிக்கிழமை திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் காலை 9 மணி-மாலை 5மணி

வட்டு. தெற்கு, வட்டு. தென்மேற்கு — நாளை சனியும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் திருஞான சம்பந்தர் வித்தியாலயம் காலை 9 மணி — மாலை 5 மணி

பொன்னாலை — இன்று வெள்ளிக்கிழமை. மூளாய் அ. மி. த. க. பாடசாலை காலை 9 மணி — மாலை 5 மணி.

மூளாய் — நாளை சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் காலை 9 மணி — மாலை 5 மணி. [ஓ-எ]

## தேசிய நோய் எதிர்ப்பு தின கலந்துரையாடல்

தேசிய நோய் எதிர்ப்பு தினப் பிரசாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் தமிழீழ அரசியல் துறை நடுவப் பணியகம் முன்பாக இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மருத்துவப் பிரிவு நடுவப்பணியகத்தில் நடைபெறும். (க)

லண்டனில் லொறி ஒன்றில்

# தக்காளிப் பெட்டிகளிடையே ஒளித்திருந்த இலங்கையர்!

லண்டன், ஒக். 13

பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாக புக முயன்ற 26 பேர் லண்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் இலங்கையரும் மற்றும் பல தேசியர்களும் அடங்குகின்றனர்.

வாகனம் ஒன்றுக்குள் தக்காளிப்பழப் பெட்டிகளுக்கு பின்னால் இந்த 26 பேரும் ஒளித்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் அனைவரும் நாடுகடத்தப்படுவர் என்று அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில் ஒருவர் லொறிச் சாரதி மற்றவர் அருகே நிறுத்தப்பட்டிருந்த வாகனச் சாரதி. இவர்களில் இருவர் இந்தியர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (க-3)

## 'உதவும் கரங்கள்' பணியகம் பருத்தித்துறையில் திறப்பு

வடமராட்சி, ஒக். 13

பருத்தித்துறை வட்டத்தில் கிராமக் கோட்டடியில் 'உதவும் கரங்கள்' பணியகம் வட்டப் பொறுப்பாளர் திரு. தமிழரசனால் திறந்துவைக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டோருக்கான உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை 'உதவும் கரங்கள்' பணியகம் மேற்கொள்ளும்.

'உதவும் கரங்கள்' ஊடாகவே உணவு, உடை, குருதிக் கொடை போன்றவை வழங்கப்படும் என இதனை திறந்து வைத்துப் பேசிய பருத்தித்துறை வட்டப் பொறுப்பாளர் திரு. தமிழரசன் கூறினார்.

பருத்தித்துறைப் பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், ஏனைய பொதுநிறுவனங்கள், வணிகர் சங்கங்கள் என்பனவற்றின் உதவிகளுடன் 'உதவும் கரங்கள்' செயற்படும். [ஓ-173]

# அளம்பிலில் ராணுவ அழிவுகளின் பின்னரும் கரைவலை தொழில் புத்துயிர் பெற்றுள்ளது

வன்னிச் சுற்றுப் பயணத்தின் போது எப்படியாவது அளம்பில் பகுதிக்குச் சென்று கரைவலை மீன்பிடித் தொழிலாளர்களைச் சந்திக்க வேண்டும் என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது.

அங்கு சென்றிருக்காவிட்டால் எமது வன்னி சுற்றுப் பயணம் முழுமை பெற்றிருக்க மாட்டாது என்பது அங்கு சென்ற பின்னரே தெரிந்தது.

தமிழீழத்தின் இதய பூமியான மணலாறுப் பிரதேசத்துக்குள் அடங்கும் ஒரு பகுதியே அளம்பில்.

உலகில் சிறந்த கடல் அடித்தள மேடையைக் கொண்ட கடற்பகுதி தமிழீழத்துக்கு உண்டு. அளம்பில், செம்மலை போன்ற கரையோரங்கள் அதற்குள் அடங்கும் பிரதான மீன்பிடித் தொழில் மையங்களாகும்.

போர் தீவிரமடைவதற்கு முன்னரும் கூட புத்தளம் மாவட்டம் உடப்பு பகுதியில் இருந்தும், திருமலையில் இருந்தும் மீனவக் குடும்பங்கள் அளம்பில், செம்மலைப் பகுதிகளுக்கு வந்து கரைவலை தொழிலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### யாழ். மீனவர் அளம்பிலில்

90ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற மீனவர்கள் அளம்பில் பகுதியில் குடியேறினர்.

1992 ஆம் ஆண்டு மே மாதம் அளம்பில், செம்மலை பகுதிகள் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட போது கரைவலை தொழில் அங்கு நாசமாக்கப்பட்டது.

### இராணுவத்தின் அழிவு வேலைகள்

ஒவ்வொன்றும் 5 லட்சம் ரூபா பெறுமதியான 21கரைவலைகள் படையினரால் அழிக்கப்பட்டன.

அப்பகுதியில் இருந்த சுமார் 5 ஆயிரம் பனை மரங்களும் படையினரால் தறித்து அழிக்கப்பட்டன. மீனவரின் வாடிகளையும் தீக்கிரையாக்கினர் படையினர்.

இராணுவம் அங்கிருந்து பின்வாங்கிய பின்னர் 1993 ஏப்ரலில் மீண்டும் கரைவலை தொழில் அங்கு ஆரம்பிக்கப்பட்டது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் இரண்டு கரை வலைகள் அப்பகுதி மீனவர்களுக்கு வழங்கப்பட்டன.

பலாலி, மாதகல் பகுதிகளில் இருந்து சென்ற பல குடும்பங்களை அங்கு காண முடிந்தது. மயிலிட்டி ஊரணி பகுதிகளைச் சேர்ந்தவர்களும் அங்கு தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

அளவெட்டியில் சைக்கிளில் மீன் வியாபாரம் செய்த திருச்செல்வம் (வயது 38) என்பவர் இப்போது உப்புமா வெளியில் கரைவலை இழுக்கிறார்.

அண்மையில் நடந்த "முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் பின்னர் அளவெட்டியில் இருந்த அவர் தனது குடும்பத்துடன் அளம்பில் சென்று விட்டார்.

### உப்புமா வெளி கரையோரப் பகுதி

முள்ளியவளையில் இருந்து குறுக்கு வழியாக — வாய்க்கால் போன்ற மணற் பாதைகளூடாக — சுமார் 20 கிலோமீற்றர் பயணம் செய்து அளம்பிலில் உள்ள உப்புமா வெளி கரையோரத்தை அடைந்தோம்.

முற்பகல் 10 மணி இருக்கும் வெய்யில் கொளுத்துகிறது.

இரு வாடிகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் வலைகளைக் கரைக்கு இழுப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு வாடிக்கும் 20 முதல் 30 பேர் வரை உள்ளனர்.

புரியாத மெட்டுடன் கூடிய பாடலை பாடிக்கொண்டு கரை வலை இழுக்கும் தொழிலாளர்களை நோக்கி கரையோரமாக நடந்து சென்றோம்.

பொங்கி எழும் கடல் அலைகள் அள்ளி வீசும் மீன் வகைகள் எமது காலடியில் விழுந்து வெள்ளிக் காசுகள் போன்று மினுங்கித்துடித்தன.

### அற்புதமான காட்சி

கரைவலை மீன்பிடியில் வலை கரைக்கு இழுக்கப்பட்டு தொகையாக மீன் வகைகள் கரையில் கொட்டப்படும் காட்சி மிக அற்புதமானது.

## குடாநாட்டிலிருந்து சென்ற மீனவர்கள் துடிப்புடன் தொழில் செய்கின்றனர்

...பொங்கி எழும் அலைகளுடன் அள்ளி வீசப்படும் மீன் வகைகள் கரைகளில் வெள்ளிக் காசுகள் போல் மினுங்கித் துடிக்கின்றன...

அளம்பில் கரையோரம் கரைவலை மீன்பிடித் தொழில் சுறுசுறுப்பாக நடக்கிறது. திடீரெனக் கடற்படைப் படகுகள் வரலாம். எனினும் அந்த மக்கள் எதற்கும் அஞ்சுவதில்லை. ஏனெனில் வாழ்வின் எந்த ஒரு நிமிடத்தையும் இழக்க அவர்கள் தயாராயில்லை...

அதற்காகவே நீண்ட நேரம் காத்திருக்கலாம்.

வலையை கடலில் வீசி விட்டு சுமார் 25 பேர் நீண்ட கயிற்றினால் அதனை கரைக்கு இழுக்க குறைந்தது ஒன்றரை மணி நேரமாவது செல்லும்.

ஒரு தடவையில் 400இலிருந்து ... நான்கு கிலோவும் படும்; அது அதிர்ஷ்டத்தை பொறுத்தது என்றார் ஒரு மீனவர்.

கீரை மீன், கூணா, கும்புளா, சோளா போன்ற சுவையான மீன்களே அங்கு அதிகம்.

### போக்குவரத்து வசதியின்மை

பிடிக்கப்படும் மீன் அங்கிருந்து குமுழமுனை, தண்ணீரூற்று, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி போன்ற இடங்களுக்கு சந்தைப்படுத்தப்படுகின்றது. எனினும் போக்குவரத்து வசதியின்மை பாரிய பிரச்சினையாக உள்ளது.

அளம்பில் உப்புமா வெளியில் கிடைக்கும் மீன் வகைகளில் மூன்றில் இரண்டு பங்கு கருவாடாக்கவே பயன்படுகிறது.

திடீரெனக் கடற்படைப் படகுகள் வந்தால் தொழில் இடைநடுவில் தடைப்படும்.

"டோறா" படகுகளைக் கடற்புலிகள் தகர்த்து விட்ட பின்னர் கடற்படைப் படகுகள் இந்தப் பக்கம் வருவதே இல்லை. என்கிறார் ஜெயபாலன் (வயது 38) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையான தொழிலாளி.

கடலில் மிகத் தொலைவில் விரைந்து சென்ற இரண்டு படகுகளை எமக்குச் சுட்டிக்காட்டிய அவர் அவை கடற்புலிகளுடையவை என்கிறார்.

அன்றைய காலை உணவை உப்புமா வெளி மீனவர்கள் தமது வாடியில் வைத்து எமக்கு வழங்கி உபசரித்தனர்.

"காலைச் சொதி என்று அவர்களிடையே பிரபல்யம் பெற்ற உணவு அது. காலையில் தொழிலை முடித்துக்கொண்டு திரும்பியதும் அதனையே அவர்கள் விரும்பி உண்கிறார்கள்.

எங்களுக்கு மீனை அள்ளி அள்ளிப் போட்டு பரிமாறி திணறடிக்கச் செய்து விட்டனர் அவர்கள்.

"மனச் சோர்வு ஏற்பட்டால் அளம்பிலுக்குப் போங்கள். கரைவலை மீனவர்களுடன் அங்கு ஒரு நாள் தங்கிவிட்டு வாருங்கள். முழு மனிதனாய் திரும்பலாம்."

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் ஒருவர் அடிக்கடி இப்படிக் கூறுவதாக எம்முடன் இருந்த ஒருவர் நினைவுபடுத்தினார். அவர் கூறுவது மிகச் சரியானதே

அந்த மண்ணில் உள்ள மக்களின் வாழ்க்கை மேலும் வளமாக்கப்படவேண்டும். அதற்கு அவர்களின் தொழில் வாய்ப்புகள் பெருக வேண்டும். கரைவலை மீன்பிடித் திட்டம் மேலும் விரிவாக்கப்பட வேண்டும்.

ஏனெனில் தமிழீழத்திற்கு பெருமளவு அந்நியச் செலாவணியை பெற்றுத் தரக்கூடிய மார்க்கங்களில் பிரதானமானது கடல் வளமே. ★

{வளம் கொழிக்கும் வன்னி மண்ணில்-3}

— நல்லூர் தாஸ் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
229/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அழுத்தம் அவசியமே

ஸ்ரீலங்கா அரசாங்கம் போர் என்ற பெயரில், வடக்கு-கிழக்கில் நடத்தி வரும் மனிதப் படுகொலைகளையும், ஏனைய அராஜகங்களையும் உலகம் கவனத்தில் எடுத்திருக்கிறது என்ற செய்தி வெளியாகி இருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசின் இந்த அக்கிரமங்களுக்கு சர்வதேச ரீதியில் எதிர்ப்பு வலுத்து வருவதாகவும் போரை நிறுத்துமாறு அழுத்தம் போடும் அளவுக்கு அது தீவிர மடையலாம் என்பதும் தகவல்.

போர் சம்பந்தமான செய்திகளுக்கு அரச தணிக்கை கொண்டு வந்ததே தமிழர் படுகொலைகளைத் தீவிரப்படுத்துவதற்காகத் தான் என்று இப்பகுதியில் எடுத்துக் கூறியிருந்தோம்.

அவ்வாறே, விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவது என்ற போர்வையில், தமிழ் மக்களுக்குச் செய்யப்படும் கொடுமைகள், மனித உரிமை மீறல்கள், அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அராஜகங்களை அரசு மறைத்து வருகிறது.

ஆனால் விடுதலைப் புலிகளின் கெட்டித்தனத்தால் உண்மை நிலைமை உலகுக்கு எட்டுகிறது.

தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுவது குறித்தும் அவர்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவது குறித்தும் —

உலக நாடுகளின் — குறிப்பாக ஐரோப்பிய நாடுகளின் — அரசுகள் மனதில் எடுத்துக் கொள்வதில்லை.

எனினும் அந்நாடுகளில் உள்ள மனித உரிமை அமைப்புகளும், தொண்டர் நிறுவனங்களும் அரசின் படுகொலைகளையும், அராஜகத்தையும் மிக ஆழமாக நோக்குகின்றன.

மேற்கு நாட்டு அரசாங்கங்களைப் பொறுத்தவரையில் அவை இராஜதந்திர நலன்களை முன்னிறுத்தி, ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலைகள் குறித்துத் தெரிந்தும் தெரியாதது போலவே நடந்து கொள்கின்றன. நேரத்துக்கும் தமது சொந்த நலன்களுக்கும் வசதியாக வளைந்து கொடுத்து வருகின்றன.

இதனைப் பயன்படுத்தி, வெளிநாடுகள் தமது பக்கமே நிற்பதாக ஸ்ரீலங்கா அரசு பிரசாரம் செய்கிறது. அந்தப் பிரசாரத்தின் மூலம் தனது செயற்பாடுகளுக்கு மேலும் புதிய நாடுகளிடமும் ஆதரவு திரட்ட முயற்சிக்கிறது.

விசேடமாக, வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கு நாடுகளின் வளைந்து கொடுக்கும் போக்கைத் தனக்குச் சாதகமாக்கி பொய்ப் பிரசாரம் செய்து வருகிறார்.

எனவே வெளிநாட்டு — மேற்கு நாட்டு — அரசுகளுக்கு உண்மை நிலையை இடித்துக் கூறவேண்டியது, அந்தந்த நாடுகளின் மனித உரிமை இயக்கங்களினதும், தொண்டர் நிறுவனங்களினதும் பொறுப்பாகும்.

வெளிநாட்டு அரசுகள் முறையாக அழுத்தம் கொடுத்தால் — ஸ்ரீலங்கா அரசுக்கு நிதி மற்றும் உதவிகளை வழங்குவதை நிறுத்தினால் — சந்திரிகா அரசு வழிக்கு வரும். ஸ்ரீலங்கா உயிர் வாழ வேண்டுமானால் — இயங்க வேண்டுமானால் — வழிக்கு வருவதை விட அதற்கு மாற்று மார்க்கம் இல்லை.

### தேசிய பாதுகாப்பு நிதி:

# அரியாலையில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 13

தேசிய பாதுகாப்பு நிதிக்கு பங்களிக்க இதுவரை ஒப்புதல் அளிக்காத மணியந்தோட்டம், அரியாலைப் பகுதி ஜே 90 முதல் 96 வரையான கிராமசேவகர் பிரிவுகளில் வாழ்கின்ற நிரந்தர மற்றும் இடம்பெயர்ந்த மக்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு அரியாலை பார்வதி வித்தியாசாலையில் நடைபெறவிருக்கிறது.

தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதல் அளிக்காத குடும்பங்களில் உள்ள ஆளுமை உள்ள உறுப்பினர் ஒருவரை இக்கலந்துரையாடலில் சமுகமளிக்குமாறு தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பகம் கேட்டுள்ளது. (இ-3)

## ராணுவ தாக்குதலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் மீது பலத்த தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் தற்போதைய அரசியல் - இராணுவப் போக்குப் பற்றிய எமது துயரத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாம் இரண்டு மிக அவசரமான விடயங்களை முனைப்புறுத்திக் கூறவிரும்புகின்றோம்.

1. இங்கு வாழ்கின்ற தமிழர் ஒவ்வொருவரையும் ஷெல்லாலும் குண்டாலும் பயமுறுத்துகின்ற தற்போதைய இராணுவ நடவடிக்கைகளின் அழிவேற்படுத்தும் தன்மை.

2 வடக்கு - கிழக்குத் தமிழர்களுடனும், அவர்களின் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப் புலிகளுடனும் கலந்தாராயாது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சாத்தியமின்மை.

முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை எத்துணை பாரதூரமான அழிவை ஏற்படுத்தியது என்பது இன்று பலரறிந்த உண்மை. [205 மரணங்கள், 953 காயப்பட்டோர். 1 லட்சத்து 87 ஆயிரத்து 589 இடம்பெயர்ந்தோர்].

வரையறுக்கப்பட்ட நடவடிக்கை எனப்பட்ட டிறாகன் பயர் நடவடிக்கை காரணமாக 15 பேர் உயிரிழந்தனர். 7 ஆயிரத்து 146 பேர் இடம் பெயர்ந்தனர்.

இப்பொழுது இவை போதாதென்று வடமராட்சியில் பள்ளிக் குழந்தைகள் பதைபதைக்கக் கொல்லப்பட்டுள்ளனர். இது கொடுமை மிக்க ஓர் அழிவு.

வடமராட்சிக் குண்டு வீச்சில் 3000 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. ஷெல் தாக்குதல் மிகக் குரூரமான கொலைச் சக்தியாக மாறியுள்ளது.

சற்றும் எதிர்பாராத நிலையில் மக்கள் தலைகளுக்கு மேல் வெடித்து சிதறுகிறது. இந்த மக்களின் உயிர்கள் பற்றி யோசிப்பதற்கு ஒன்றுமில்லையென்ற எடுகோள் இல்லாத இப்படியான போரை இந்த முறையில் நடத்த முடியாது.

சமாதானத்துக்கான ஆலோசனைகள் பற்றிப் பேசும் பொழுது, வடக்கு—கிழக்குத் தமிழர் மட்டத்திலும், தமிழர்களின் பிரதிநிதிகளாகிய விடுதலைப் புலிகளாலும் கலந்தாராயப்படாத நிலையில், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்காது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

இப்பொழுதுள்ள பொருளாதாரத் தடை, குண்டு, ஷெல் தாக்குதல் ஆகியவற்றுக்கிடையே மக்களால் பயனுள்ள கலந்துரையாடலினைச் செய்ய முடியாது.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு எதிரானவர்களல்லர். தமிழருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே வேறுபாடு கற்பிப்பது என்பதோ, தமிழரைப் புலிகளிடமிருந்து [illegible] படுத்துவது என்பதோ யதார்த்த பூர்வமான ஒன்றல்ல.

எனவே நாம், முதலில் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவத் தாக்குதல்களை நிறுத்துமாறும், வழமை நிலைக்கான சூழலை ஏற்படுத்துமாறும், தமிழ்ப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மீளத் தொடக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்கண்டவாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரில் கைச்சாத்திட்டோர்:-

1. பேராசிரியர் கா. சிவத்தம்பி [தலைவர் நுண்கலைப் பீடம், யாழ். பல்கலைக்கழகம்].
2. பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை [கலைப் பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்]
3. பேராசிரியர் அ. சண்முகதாஸ் [தலைவர், நடனத்துறை, யாழ். பல்கலைக்கழகம்].
4. கலாநிதி. சோ. கிருஷ்ணராசா [தலைவர், மெய்யியற்துறை, யாழ் பல்கலைக்கழகம்].
5. வண - கலாநிதி எ. ஜெ. வி சந்திரகாந்தன் [தலைவர், கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்].
6. கலாநிதி நா. சுப்பிரமணியன் [சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்.
7. ஏ. ஜெ. கனகரத்தினா [விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்].
8. திருமதி ஏ.என்.கிருஷ்ணவேணி [விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்].
9 செல்வி சி. சிவசுப்பிரமணியம் [உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்].
10. திருமதி ஜி. கருணாகரன் [உதவி விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்].
11. திரு. கே. சிதம்பரநாதன் [விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்].
12. செல்வி ஆர். ஜெயரஞ்சனி [உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்].
13. திரு. எம். சண்முகலிங்கம் [நாடக அரங்கக்கல்லூரி].
14. திரு. மீ. தேவானந் [சுதந்திர அரங்க நடிப்புக் குழு].
15 திரு. க. தணிகாசலம் [தேசிய கலை, இலக்கியப் பேரவை].
16. திரு. டொமினிக் ஜீவா [தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்].
17. திரு. வி. ஜே. கொன்ஸ்டன்ரைன் [யாழ். திருமறைக் கலாமன்றம்].
18. செல்வி கே. லோசனா [மகளிர் நடவடிக்கைக் குழு].
19. திரு. பிரசாந்தன் [அகில இலங்கைக் கம்பன் கழகம்].
20. திரு. ஏ. ரி. பொன்னுத்துரை [குரும்பசிட்டி சன்மார்க்க சபை].
21. திருமதி கோகிலா மகேந்திரன் [கலை, இலக்கிய களம்.] (இ)

## விசாரணைக்கு---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

[illegible] என்றும் — [illegible] தெரிவித்தார் (இ-3)

# தமிழீழ கல்வித் தேர்வு பெறுபேறுகள் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 13

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வின் யாழ். குடாநாட்டுக்குரிய பெறுபேறுகள் இன்று வெளிவருகின்றன.

பாடசாலைகளுக்குரிய பெறுபேறுகளை பாடசாலை அதிபர்கள் கோட்டக் கல்விப்பணிமனைகளில் பெறுமாறு தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்.

இத்தேர்வில் எட்டுப்பாடங்களிலும் சிறப்புச் சித்திகளை வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் நால்வரும் —

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள் நால்வரும்-

பரியோவான் கல்லூரி மாணவர்கள் இருவரும் —

ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் இருவரும் —

கனகரத்தினம் ம.ம. வித்தியாலய மாணவர் ஒருவரும்—

பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது (உ-3)

## அதிபர்கள் ஆசிரியர்களுக்கு

நல்லூர் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த [கொத்தணிப் பாடசாலை அடிப்படையிலான] அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள், பழைய மாணவர் சங்கச் செயலாளர்களுக்கான சந்திப்பு இன்றும், எதிர்வரும் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

கொக்குவில், கோண்டாவில் இராமகிருஷ்ண கொத்தணிகளைச் சேர்ந்தோருக்கு —

இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12. 30 மணிக்கு— கொக்குவில் இந்துக் கல்லூரியில்.

யாழ் இந்து மகளிர் கொத்தணியைச் சேர்ந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கு---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவுக்கோ— இக்கப்பல்கள் வருவது குறித்து எந்த வித தகவலும் கிடைக்கவில்லை. கல்யாணி, ஓஷன் காரியர் கப்பல்கள் படையினருக்கு பொருள்களை ஏற்றி இறக்குவன என்றும்—

'ஹரண' செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள கப்பல் என்றும்—

'மாஹோ' கப்பல் ஏற்கனவே எரிபொருள், உரம் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டிருந்தது என்றும் — யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தின் உணவு நிலை தட்டுப்பாடு குறித்து சர்வதேச மட்டத்தில் பிரஸ்தாபிக்கப்படுவதால் அரசு அந்த நிலையை சமாளிக்கும் வகையில் இந்தக் கப்பல் விடயத்தை வெளியிட்டுள்ளது என்று பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர். (இ-3)

## ஹரண...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறை வரும் இக்கப்பல் மறுநாள் காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

மாவின் அவசர தேவை கருதி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மனிதாபிமான அடிப்படையில் தனது கப்பலான "ஹரண" வில் மா ஏற்றிவருவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## நவீன--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எம்.பிக்கள், புளொட்டின் மூன்று எம்.பிக்கள் ஆகியோரின் ஆதரவு அரசுக்கு முக்கியமாக இருக்கும் இவ்வேளையில் தமிழ்க் குழுக்கள் ஆயுதங்களைக் கேட்டு இத்தகைய தோர் மிரட்டலை தமிழ்க் குழுக்கள் விடுத்திருப்பது அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

தமக்கு போதிய பாதுகாப்பு வழங்குமாறும் இல்லையேல் தங்களுக்கு நவீன ஆயுதங்களைத் தருமாறும் அவை அரசைக் கேட்டுள்ளன.

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் கொழும்பில் இயங்கிய பல தமிழ்க் குழுக்கள் தமது பாதுகாப்புக்கு தம்முடன் நவீன ஆயுதங்களை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டிருந்தன.

ஆனால் புதிய அரசு பதவியேற்றவுடன் தமிழ்க் குழுக்களின் நவீன ஆயுதங்கள் பறிக்கப்பட்டன.

இதற்கிடையில்—

கொழும்பில் இயங்கும் தமிழ்க் குழுக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவது குறித்து ஆராய்வதற்காக நேற்று கொழும்பில் உயர் மட்ட மாநாடு ஒன்று நடைபெற்றதாகவும் -

எனினும் நேற்று மாலை வரை அந்த மாநாடு பற்றிய தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை என்றும்—

கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

இதனிடையே—

கொழும்பில் ஏற்படக்கூடிய எந்தவிதமான நிலைமையையும் சமாளிக்கக் கூடியதாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று பிரதி பொலிஸ் மா அதிபர் கொட்டகெதெனிய தெரிவித்துள்ளார்.

ஈ.பி டி.பி தலைவர் இல்லம் மீதான தாக்குதலையடுத்து கொழும்பில் பாதுகாப்புக்கு விடுக்கப்பட்டுள்ள எந்தவித அச்சுறுத்தலுக்கும் முகம் கொடுக்க பொலிஸார் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## நான்கு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வும் —

நான்கு கப்பல்களிலும் சுமார் ஆயிரத்து இருநூறு தொன் உணவுப் பொருள்களை பருத்தித்துறைக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் இலங்கை வானொலி மேலும் தெரிவித்தது. (இ-எ)

## புத்தூரில் உயிரிழந்த---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டு பெயர் விபரங்களைப் பெற்றுக் கொடுத்தது.

புத்தூர் மெதடிஸ்த தேவாலயம், மிஷன் வைத்தியசாலை மற்றும் மிஷனால் நடத்தப்பட்ட முதியோர் இல்லம் ஆகியவை அமைந்த பகுதி இடிமுழக்க ராணுவ நடவடிக்கையின் போது படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் மொத்தம் 91 பேர் அங்கு படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் முதியோர் இல்லத்தைச் சேர்ந்தோர் 13 பேர்மட்டுமே

மிகுதியில் மெதடிஸ்த தேவாலயம், மிஷன் ஆஸ்பத்திரியைச் சேர்ந்தோர் ஒரு சிறு எண்ணிக்கையினரே.

பெரும்பாலான ஏனையோர் புத்தூர் மற்றும் அச்சுவேலி ஆவரங்கால் பகுதிகளில் படையினரிடம் சிக்கிய வயோதிபர்கள்.

படையினரால் இவர்கள் பிரஸ்தாப ஆஸ்பத்திரிப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இவர்களிலேயே 9 பேர் மரணம் அடைந்திருப்பதாக தற்போது தகவல் வெளியாகி இருக்கிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## மடுத்தீன் செபதேயு
### [மதியாபரணம்]
(இளைப்பாறிய கலால் உத்தியோகத்தர்)

நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட மடுத்தீன் செபதேயு நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மடுத்தீன் பிலிப்ப ச்சி தம்பதியினரின் அன்பு மகனும், திருமதி லூர்த்து புஸ்பத்தின் அருமைக் கணவரும், திருமதி இராஜேஸ்வரன் மாலினியின் அன்புத் தந்தையும், திரு அன்ரனி இராஜேஸ்வரனின் (டென்மார்க்) அருமை மாமனாரும், செலினிக்கொலினின் பேரனும் காலஞ்சென்ற தம்பிராசா, திருமதி யோசவ் நேசம்மா, காலஞ்சென்ற திருமதி யோசப் நேசராசம், காலஞ்சென்ற திருமதி இம்மனுவேல் விக்ரோறியா, திரு. திருஞானசெல்வம் ஆகியோரின் சகோதரரும், திருமதி கிறிஸ்ணா செட்டி சாந்தா [அமிர்தம்], காலஞ்சென்ற திருமதி செபநாயகம் அருளம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13-10-95) பி.ப. 3-30 மணிக்கு நாவாந்துறை புனித நீக்கலஸ் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி நிறைவேற்றிய பின் நாவாந்துறை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகிறேன்.

தகவல்:
திருமதி இராஜேஸ்வரன் மாலினி
(மகள்)

05, 1ஆம் குறுக்கு வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம். [38983]

## திருமதி இராமையா தெய்வானை

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இராமையா தெய்வானை 12-10-95 வியாழக்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற இராமையா ஆசாரியாரின் அன்பு மனைவியும் செல்வநாயகம், செல்லத்துரை (ஓய்வு பெற்ற நில அளவையாளர்) தவமலர், மகேஸ்வரி, மகாலிங்கம், செல்வரட்ணம் (ஓய்வு பெற்ற வருமானவரி உத்தியோகஸ்தர், அருளம்மா, சிவஞானம் (ஜேர்மனி), யோகநாதன் ஆகியோரின் அன்புத்தாயாரும் கமலாம்பாள், லோகசறோஜா, காலஞ்சென்ற கனகரட்ணம், பாலகிருஷ்ணன், பாக்கியலட்சுமி, பத்மராணி, பாலச்சந்திரன், கௌரி (ஜேர்மனி), ருக்மணி ஆகியோரின் அன்பு மாமியாரும ஆவார் அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (13-10-1995) வெள்ளிக்கிழமை 12 மணியளவில் சி. தம்பிராசா அவர்களின் இல்லத்தில் நடைபெற்று ஊரிப்பிட்டி மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
இ. செல்வநாயகம் ஆசாரி
புத்தூர்கிழக்கு,
புத்தூர்.

தற்போதைய முகவரி,
சி. தம்பிராசா ஆசாரி,
சிவன்கோயில் வீதி,
மட்டுவில் தெற்கு.
சாவகச்சேரி (38978)

## கந்தையா தர்மரத்தினம்

தொல்புரம் மத்தியைச் சேர்ந்த கந்தையா தர்மரத்தினம் [இளைப்பாறிய தொல்புரம் அ. மி. த. க. பாடசாலை அதிபர்] காலமாகிவிட்டார்.

அன்னார் செல்வேஸ்வரியின் (இளைப்பாறிய, தொல்புரம் அ. மி. த. க. பாடசாலை, ஆசிரியை) அன்புக் கணவரும், யோகேந்திரன் (ஜேர்மனி), இந்திரா (சுழிபுரம், விக்ரோறியாக் கல்லூரி, ஆசிரியை), ஞானேந்திரன் (பிரான்ஸ்), தேவேந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற புவீந்திரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இன்பா (ஜேர்மனி) தவநாயகம் (இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), கவிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இன்பயோகி (ஜேர்மனி) டினுஷா, சில்வியா, தர்சனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், அருமைநாயகம் (இளைப்பாறிய தபால் அதிபர்), காலஞ்சென்ற பாலசுந்தரம் (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்), சற்குணதேவி (கனடா), தேவராஜமலர் [யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை தொல்புரம் மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று 12-10-95 வியாழக்கிழமை நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
இந்திரா தவநாயகம்
(மகள்)

"புவி வாசா",
தொல்புரம் மத்தி,
சுழிபுரம். [38977]

## ஒன்றுகூடல்

அரச சார்பற்ற நிறுவனங்களின் அவசரகால முதலுதவிச் சிகிச்சைப் பிரிவின் கீழ் பேசர்க்கால முதலுதவிப் பயிற்றுநர் பயிற்சி பெற்றோருக்கான விசேட ஒன்றுகூடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். [இ]

## தமிழீழ சட்டக் கல்லூரி

தமிழீழ சட்டக்கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டோர் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நல்லூர் சங்கிலியன் வீதியிலுள்ள மேன் முறையீட்டு நீதிமன்றில் சமுகமளிக்கும் படிகோரப்பட்டுள்ளது.

## அதிபர்கள்--

[7 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பாடசாலைகளைச் சேர்ந்தவர்களுக்கு —
திங்கட்கிழமை (16-10-95) நண்பகல் 12.30 மணிக்கு— யாழ். இந்து மகளிர் கல்லூரியில். (அ)

# மரண அறிவித்தல்கள்

## வெற்றிவேற் பிள்ளை சரஸ்வதியம்மா

வட்டுக்கோட்டை மணிபகாரன் ஒழுங்கையைச் சேர்ந்த வெற்றிவேற்பிள்ளை சரஸ்வதியம்மா நேற்றுக் காலமானார்.

இவர் வெற்றிவேற்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யோகீஸ்வரன், தில்லைலம்பலம் (ஆசிரியர் புத்தளம்), யோகாம்பிகை, தானநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவலிங்கம் (யாழ். போதனா வைத்தியசாலை), சிறிகாந்தன் (வலி, மேற்கு பிரதேச சபை உப அலுவலகம் வட்டுக்கோட்டை), பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகரன், கேதீஸ்வரன், தேவிகா, ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வட்டுக்கோட்டையில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2-00 மணியளவில் வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சி சிறிகாந்தன்
(மருமகன்)

## சீவரத்தினம் நல்லம்மா

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் உரும்பராயை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் நல்லம்மா நேற்றுப் பிற்பகல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சீவரத்தினத்தின் அன்பு மனைவியும் கமலாதேவி, கனகசிங்கம் (ஹொலண்ட்), ஆகியோரின் அன்புத்தாயும் குணரத்தினம், கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பிரபாகரன், கிருபாகரன் (ஹொலண்ட்), சாந்தி (பிரான்ஸ்), சிவகுமார் (ஹொலண்ட்), சசிந்தறாபி (வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவி), கஸ்தூரி (ஊரெழு கணேச வித்தியாசாலை ஆசிரியை), முரளீதரன் (யாழ். மத்திய கல்லூரி), வாசுகி (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விசுவலிங்கம், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13-10-95) காலை 11-00 மணிக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி. கமலாதேவி
(மகள்)
உரும்பராய் தெற்கு,
உரும்பராய். [38985]

# மரண அறிவித்தல்கள்

## திருநாவுக்கரசு மங்களம்

சுன்னாகம் ஐயனார் வீதி தோப்பு வளவை பிறப்பிடமாகக் கொண்ட மங்களம் [இளைப்பாறிய ஆசிரியை] நேற்று (12-10-1995) காலமானார்.

இவர் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும், நாதன், பார்வதி, திருமகள் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தம்பு, பரமநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், பிரதீபன், பிரியந்தி, பிரவீனா ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்காலிக இருப்பிடமான சோமசுந்தரம் வீதி, தாவடி மேற்கு, கொக்குவில் (பத்திரகாளி) கோவிலடி இல்லத்தில் 13-10-1995 இன்று காலை 10-00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
தம்பு [மருமகன்]

தாவடி மேற்கு,
கொக்குவில் (38981)

## கதிரவேலு புவனேஸ்வரி

திருநெல்வேலி, இராமலிங்கம் வீதி, கெனடி ஒழுங்கையைச் சேர்ந்த கதிரவேலு புவனேஸ்வரி காலமாகி விட்டார்.

அன்னார் கதிரவேலு (றமேஸ் வெதுப்பக உரிமையாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகேஸ்வரி, பரமேஸ்வரி, செல்வராஜா (நல்லூர் பிரதேச சபை), யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், பத்மாவதி, ஞானேஸ்வரி (ஜேர்மனி), உதயகுமார (இத்தாலி), இராஜேஸ்வரி (ஜேர்மனி) கேமாவதி ஆகியோரின் அன்புத்தயாரும், அருட்செல்வன் (பத்மா மில் உரிமையாளர்), தர்மரட்ணம் (ஜேர்மனி), குமுதினி (இத்தாலி), மனோகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 13-10-95 காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
அருட்செல்வன்
(மருமகன்)

கெனடி வீதி
திருநெல்வேலி கிழக்கு. (38972)

## திருமதி யோகேஸ்வரி முருகேசு
புலோலி கிழக்கு

புலோலி கிழக்கு போகவாசாலையச் சேர்ந்த யோகேஸ்வரி அவர்கள் 12-10-95 இல் சிவனடி சேர்ந்து விட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான உலாந்தா முத்துச்சாமி, சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற முருகேசுவின் (Overseer) மனைவியும், யோகசுந்தரம் (Engineer, Colombo), காலஞ்சென்ற யோகசவுந்தரி, யோகசம்பந்தன் (கனடா), யோகராசா, யோகரஞ்சிதம், யோகநாதன் (Ship Captain), யோகரதி (Chartered Accountant UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், அகிலாண்டேஸ்வரி, பகீரதி, இராசரத்தினம் (திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் பிரதேசச் செயலகம் கரவெட்டி), ஸ்ரீயோகேஸ்வரி, சிவகுருநாதன் (MSc Computer Analyst UK) ஆகியோரின் மாமியாரும் யோகீதா அருணன், யோகரஞ்சனி, யோகாஞ்சனா, யோகினி யோகானந்தி வைரவி, வித்தியாதரன், மயூரி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13-10-95 வெள்ளிக்கிழமை பி.பகல் 3.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் பருத்தித்துறை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
இ. யோகரஞ்சிதம்
(மகள்)

யோகவாசா,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை (38984)

பெற்றோர்களே!

எதிர்காலச் சந்ததிக்காக
எதிர்வரும் 4ஆம் திகதி
உங்கள் குழந்தைகளுக்கு
நீங்கள் ஆற்றவேண்டிய
அத்தியாவசிய பணிஒன்று
காத்திருக்கின்றது.

அது என்ன?

விவரம் நாளை....

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13-10-95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org